**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி</u>**

**<u>முன்னிலை: திருமதி.V.சிவகாமசுந்தரி, பி.ஏ.,பி.எல்.,</u>**

**<u>மாவட்ட உரிமையியல் நீதிபதி, அறந்தாங்கி.</u>**

2025 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 27-ம் நாள் வியாழன்கிழமை

**<u>IA.No.03/2025</u>**

**In**

**<u>O.S No.81/2019</u>**

1) சாந்தி,

2) வீரசேகர் **......மனுதாரர்கள்/1,2 பிரதிவாதிகள்**

**//எதிர்//**

1) சுந்தரமூர்த்தி,

2) ராஜேஸ்வரி (இறந்தார்),

3) தனலெட்சுமி,

4) அருண்குமார், **.......எதிர்மனுதாரர்கள்/வாதிகள்**

5) ஆணையர்,

நகராட்சி அறந்தாங்கி. **.......எதிர்மனுதாரர்/3 ம் பிரதிவாதி**

இந்த மனுவானது இந்த நீதிமன்றத்தில் என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள்/1,2 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.S.ராமநாதன்.,B.A.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், 1,3,4 ம் எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.கை.வீரமணி.,M.A.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும், இந்த மனு சம்பந்தப்பட்ட அனைத்து ஆவணங்களும் இந்த நீதிமன்றத்தினால் நன்கு கவனமாக பரிசீலனை செய்யப்பட்டும், இந்நாள் வரையில் என் சீரான பரிசீலனையில் இருந்து, இன்று இந்த நீதிமன்றம் வழங்கும்.

**<u>உத்தரவு</u>**

இந்த மனுவானது மனுதாரர்கள்/1,2 பிரதிவாதிகள் தரப்பில் உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 18 விதி 17 -ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்:-**

இதில் கண்ட வாதி மனுதாரர் பெயரில் ஏனைய பிரதிவாதிகளின் பெயரிலும் செயலுறுத்துக்கட்டளை மற்றும் நிரந்தர தடையாணை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார். இதில் கண்ட எதிர்மனுதார் வாதி வழக்கில் வாதி தரப்பு சாட்சி 1ஆக விசரிக்கப்பட்டுள்ளார். மேற்படி சாட்சியினை மனுதாரர்கள்/ 1,2 ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்வதற்கு வாய்தா போடப்பட்டிருந்தது. இந்நிலையில் கடந்த 08.08.2025 தேதியன்று மனுதாரர்கள்/ 1,2 பிரதிவாதிகள் திடீரென அவசர நிமித்தம் வெளியூர் சென்று விட்டனர். அதனால் வழக்கறிஞரை சந்தித்து வாதி தரப்பு சாட்சி 1 யை குறுக்கு விசாரணை செய்வதற்கு விபரம் தெரிவிக்க இயலவில்லை அன்றைய தினம் மனுதாரர்களது தரப்பில் வாதியை குறுக்கு விசாரணை செய்யவில்லை என்ற காரணத்தினால் வாதி தரப்பு சாட்சி 1ன் விசாரணை முடிக்கப்பட்டுள்ளது. மனுதார்கள்/1,2 பிரதிவாதிகள் தரப்பில் விசாரணை குறுக்கு செய்யமால் போனது வேண்டுமென்றோ அலட்சியத்தலோ ஏற்பட்டதல்ல. எனவே வா.சா.1 யை மீண்டும் அழைத்து விசாரணை செய்ய வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக கட்சி செய்யப்பட்டுள்ளது.

**2. 1ம் எதிர்மனுதாரர்கள்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு 3,4 எதிர்மனுதாரர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம் :-**

இந்த வழக்கில் சாட்சி வா.சா.1 இந்நீதிமன்றத்தில் குறுக்கு விசாரணைக்காக ஆஜராகியும், மனுதாரர்கள் தரப்பில் மேற்படி சாட்சியை குறுக்கு விசாரணை செய்யாமல் வேண்டுமென்றே காலம் கடத்திவட்டு இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள். மனுதாரர்கள் நீதிமன்றத்தில் ஆஜராகாமல் இருந்ததற்கு சரியான காரணங்களையோ, ஆவணங்களையோ இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. மனுதாரரின் மனு ஏற்புடையதல்ல. எனவே மனுதாரரின் இந்த மனுவை 1ம் எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டி கட்சி செய்யப்பட்டுள்ளது.

**3. தற்போது இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய முக்கிய சங்கதி யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா இல்லையா? என்பதாகும்.**

இந்த மனுவானது மனுதாரர்/1,2 பிரதிவாதிகளால் வா.சா.1 குறுக்கு விசாரணைக்கு நிலுவையில் இருந்தபோது 1,2 பிரதிவாதிகள் வெளியூர் சென்றிருப்பதால் குறுக்கு விசாரணை விபரம் தெரிவிக்க முடியவில்லை எனவும், எனவே வா.சா.1 மறுஅழைப்பு செய்ய வேண்டுமென்று கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எதிர்மனுதாரர் தாக்கல் செய்த எதிருரையில் காலம் கடந்து சங்கதிகளை கண்டு இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக கட்சி செய்யப்பட்டுள்ளது. வழக்கு கோப்புகளை பரிசீலித்து பார்க்கும்போது கடந்த 08.09.2025 அன்று வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி 1,2 பிரதிவாதிகள் குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் இந்நீதிமன்றத்தால் முடித்துவைக்கப்பட்டு உத்தரவிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு உச்ச நீதிமன்றம் K.K.Velusamy Vs N.Palanisamy, reported at (2011) 11 SCC 275, என்ற வழக்கில் கீழ்க்கண்டவாறு தீர்ப்பளித்துள்ளது.

"We may add a word of caustion. The power under Section of 151 or order 18 Rule 17 of the Code is not intended to be used routinely, merely for the asking. If so used, it will defeat the very prurpose of various amendments to the code to expedite trials. But where the application is found to be bonafide and where the additional evidence, or oral or documentary, will assist the court to clarify the evidence on the issues and will assist in rendering justice, and the court is satisfied that sufficient reasons, the court may exercise its discretion to recall the witnesses or permit the fresh evidence. But if it does so, it should ensure that the process does not become a protracting tactic. The court should firstly award appropriate costs to the other party to compensate for the delay."

மேற்கண்ட முன்தீர்ப்பின் அடிப்படையில் வழக்கெழு வினாவை தீர்மானிப்பதற்கு வா.சா.1 யை தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்வது அவசியம் என்பதால் இம்மனு அனுமதிக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது. இருப்பினும் மனுதாரரால் ஏற்பட்ட காலதாமதத்தை ஈடு செய்யும் வகையில் மனுதாரர் வாதிக்கு செலவுத்தொகையினை செலுத்தி வைக்க கடமைப்பட்டவர் என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

முடிவாக இம்மனு ரூ.1,000/- செலவுத்தொகையுடன் அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு பின் அவரால் நேரடியாக கணினி சாதனத்தில் பதிவு செய்யப்பட்டு பின் என்னால் பிழைகள் திருத்தம் செய்யப்பட்ட பின்னர் இன்று 2025-ம் ஆண்டு நவம்பர் மாதம் 27-ம் நாள் என்னால் கையொப்பம் செய்யப்பட்டு இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

**ஒம்/-V.சிவகாமசுந்தரி**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**அறந்தாங்கி.**

**சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் பட்டியல்:-**
**மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்**: இல்லை
**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி**: இல்லை
**எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்** : இல்லை

**//உண்மை நகல்//**

SIVAGAMASUNDARY V
Digitally signed by SIVAGAMASUNDARY V
Date: 2025.11.27 17:05:18 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**அறந்தாங்கி.**

**வரைவு/செவ்வை உத்தரவு**
**IA.No.03/2025**
**O.S.No. 81/2019**
**நாள். 27.11.2025**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**அறந்தாங்கி.**